# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

## மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினம்

05.12.2024

உறுதிமொழி

பொன்மனச்செம்மல், பாரதரத்னா, மக்கள் திலகம், புரட்சித்தலைவர், எம்.ஜி.ஆர் அவர்களின் அழைப்பை ஏற்று பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்து, தமிழ்நாட்டு மக்களையே தன் சொந்தமாக கருதி, ஏழை, எளியோருக்கான எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, திராவிட இயக்கத்தின் மணிமகுடமாக, பெண்ணினத்தின் பெருமையாக, உலக அரசியலை திரும்பிப் பார்க்க வைத்தவராக, நாடு போற்றும் நல்ல தலைவராக திகழ்ந்த, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் இப்புனித நினைவிடத்தில், அம்மா அவர்கள் காட்டிய வழியில், மக்கள் நலக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும், கழக பொதுச் செயலாளர், மக்கள் செல்வர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் ஆற்றல் நிறைந்த தலைமையில், வீறு நடை போடும் நாம், அம்மா அவர்கள் முன்னெடுத்த லட்சியங்களை வென்றெடுத்திட, உளப்பூர்வமாக உறுதிமொழி ஏற்போமாக…

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

1. தமிழகமே எனது குடும்பம், தமிழக மக்களின் நலனே எனது நலன், என்ற உயர்ந்த லட்சியத்தை தன் இலக்காக கொண்டு, தமிழக மக்களின் வளர்ச்சிக்காக, தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, அன்பு காட்டுவோருக்கு அரவணைக்கும் தாயாக, அழிக்க நினைப்போருக்கு அக்கினிப் பிழம்பாக, எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த, நம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களாய் , எந்நாளும் பயணித்திட இந்நாளில் உறுதி ஏற்கிறோம்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

2. பொன்மனச்செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்டு, நம் இதயதெய்வம் அம்மா அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இயக்கம், இன்று சுயநலத்தையும், சுயலாபத்தையும் அடிப்படை குணமாகக் கொண்ட ஒரு சிலரின் கைகளில் சிக்கி, இயக்கம் தொடங்கிய நோக்கமே திசைமாறி செல்லும் நிலையில், நாம் போற்றி வணங்கும் மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களையும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் எனும் ஜனநாயகம் ஆயுதம் கொண்டு நிச்சயம் மீட்டெடுப்போம் என இந்நாளில் நாம் உறுதி ஏற்கிறோம்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

3. இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியாலும், தொலைநோக்கு சிந்தனையாலும், கொண்டுவரப்பட்ட நாடு போற்றும் நல்ல பல திட்டங்களை திட்டமிட்டு முடக்குவதோடு, இதயதெய்வம் அம்மா அவர்களின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்வதையுமே, வாடிக்கையாக வைத்திருக்கும் திமுக, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற மறுப்பது, விளைநிலங்களை அழித்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிப்பது, கட்டணங்களையும், வரிகளையும் பன்மடங்கு உயர்த்தி பொதுமக்கள் மீது கூடுதல் சுமையை ஏற்றுவது, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை வீதிக்கு வந்து போராட வைப்பது என, அனைத்து தரப்பு மக்களையும் சிரமத்திற்குள்ளாக்கும் தீயசக்தி திமுகவிடமிருந்து தமிழகத்தையும், தமிழக மக்களையும் மீட்டெடுப்போம் என இந்நாளில் உறுதியேற்போம்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

4. தமிழகத்தில் நாள்தோறும் அரங்கேறும் கொலை, கொள்ளைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள், கூலிப்படை அராஜகங்கள், சாதாரண பொதுமக்கள் தொடங்கி, அரசு ஊழியர்கள், காவலர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள் வரை, யாருக்குமே பாதுகாப்பில்லாத சூழலை உருவாக்கி, சட்டம் ஒழுங்கு சந்திசிரிக்கும் அளவிற்கு சீர்குலைந்து, ஒட்டுமொத்த தமிழகத்தையும், போதைப் பொருள் கடத்தலின் தலைநகரமாகவும், கொலை நகரமாகவும் மாற்றியிருக்கும் திமுகவின் கோரப்பிடியிலிருந்து தமிழகத்தை மீட்டெடுப்போம் என இந்நாளில் உறுதி ஏற்கிறோம்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

5. திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கையான சமூக நீதியை நிலைநாட்டி, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை பெற்றுத் தந்த சமூக நீதி வீராங்கனையாக, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்த பொன்னியின் செல்வியாக திகழ்ந்ததோடு, தமிழக மக்களின் பொருளாதாரம் ஏற்றம் பெற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்திய நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அன்னைத் தமிழ் மொழி அறிவிக்கப்படவும், உலகப் பொதுமறையான திருக்குறள் இந்திய தேசிய நூலாக அறிவிக்கப்படவும், தமிழகத்தின் உரிமைகள் அனைத்து நிலையிலும் பாதுகாக்கப்படவும், தமிழக மக்களின் மேன்மை உறுதி செய்யப்படவும், இலங்கைத் தமிழர்களின் சுதந்திரமான வாழ்வுக்காகவும், நம் அம்மா அவர்கள் இறுதிவரை உறுதியோடு முன்னெடுத்த அதே பாதையில் நாமும் பயணிப்போம் என இந்நாளில் சபதமேற்கிறோம்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

6. நம் இதயதெய்வம் அம்மா அவர்களின் திருப்பெயரை கழகத்தின் பெயரிலும், அவரின் கம்பீர உருவத்தை கட்சிக் கொடியிலும் தாங்கி நிற்கும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வாயிலாக, நம்மை வழிநடத்தும் கழகத்தின் பொதுச்செயலாளர், மக்கள் செல்வர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் தலைமையில் பயணிக்கும் நாம், எத்தனை சோதனைகளும், எதிர்ப்புகளும் வந்தாலும் அதனை துணிச்சலுடன் எதிர்கொண்டு தொடர்ந்து முன்னேறிச் செல்வோம் என நம் அம்மா அவர்கள் துயில் கொள்ளும் இப்புனித தலத்தில் வீர சபதமாக ஏற்றிடுவோம்.

*பகுத்தறிவு பகலவன்*
**தந்தை பெரியாரின் புகழ் ஓங்குக...**

*தமிழ்த்தாயின் தலைமகன்*
**பேரறிஞர் அண்ணாவின் புகழ் ஓங்குக...**

*பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்*
**அவர்களின் நீடித்த புகழ் ஓங்குக...**

*இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா*
**அவர்களின் புகழ் என்றென்றும் ஓங்குக...**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014